கொடுத்தபிறகுதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர, பாதிக்கப்படும் என்று நாமாகவே முடிவு செய்து தலைமைப் பொறியாளருக்கு அறிவுரை கூறுவது சரியல்ல. அது குறித்த விளக்க ரிப்போர்ட்டுகளைத்தான், அந்த அடிப்படையில் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னதைப் போல் திருமங்கலம் பகுதியும் வறண்ட பகுதிதான். மேலும் கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே உள்ள அருப்புக்கோட்டையும் வறண்ட பகுதிதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய முதுகளத்தூர் பகுதியும் வறண்ட பகுதிதான். இந்தப் பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படாத வகையிலேதான் இந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே திரும்பவும் அந்த அடிப்படையிலேதான் ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவலை என்னவென்றால் மதுரை மாவட்டத்திலே இந்த அணை கட்டப்படுமேயானால் மழை பெய்யும் நீர் எல்லாம் அங்கே தேக்கப்பட்டுவிடும், எனவே இந்தப் பகுதிக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதுதான். ஆனால் கீழ்ப் பகுதிகளிலே உள்ள மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படும். ஆகவே அதுபற்றி எல்லாம் நன்கு ஆய்வு செய்யப்பட்டதற்குப் பிறகுதான் இடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஏற்கனவே பயன் பெற்று வருகின்ற அந்த ஸ்டெபிலைசேஷன் பாதிக்கப்படாத வகையிலேதான் நிச்சயமாக இந்த அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) இறுதித் துணை நிதி அறிக்கை, 1981–82.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை* இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 502.67 கோடியில், ரூ. 235.73 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 266.94 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் வருகின்றன. பல்வேறு கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்களும் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரணங்களும் இத்துடன் இணைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் துணை மானியக் கோரிக்கை வைக்கப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களும் இப்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு

---

*நிதி அமைச்சரின் உரையை ஆங்கிலத்தில் 358-359-ம் பக்கங்களில் இணைப்பு I-ல் காண்க.

1982 மார்ச் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மேற்பட்டுக் கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்படுகிற செல வினங்களும் இந்த மதிப்பீடுகளில் உள்ளன. இந்த மதிப்பீடு களில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களில் முக்கியமான சில திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. ஆதி திராவிடர்களின் நலனைக் கட்டிக் காப்பதிலும் அவர்கள் ஏழ்மைக் கோட்டிற்கு மேலாக வர அவர்களுக்கு உதவி செய்வதிலும் இந்த அரசு கண்ணும் கருத்துமாய் இருந்து வருகி றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகத்தின் பங்கு மூலதனத்திற்கு ஒரு கோடி ரூபாய் மேற்கொண்டும் வழங்கப்பட்டுள்ளது. இக் கழகம் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட் டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பழங்குடியினர் பள்ளி களுக்காகக் கட்டிடம் கட்ட மேற்கொண்டும் ரூ. 12 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட மாணவர்களுக்கு மெட்ரிக்குக்கு மேற்பட்ட படிப்பு பயில உதவித் தொகை அளிக் கும் பொருட்டு மேற்கொண்டும் ரூ. 22.70 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

3. இந்த ஆண்டில் 150 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக இந்த அரசு மேற்கொண்டும் ரூ. 33.57 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீட்டில் இதற்கான அனுமதி உள்ளது.

4. கிராமப் பகுதிகளில் கடன் வழங்குவதில் முக்கிய நிறுவன மாக விளங்கி வருகின்ற கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங் களை வலுப்படுத்த எல்லா முயற்சிகளையும் இவ்வரசு மேற் கொண்டு வருகிறது. கிராமக் கடன் வழங்கு கூட்டுறவு நிறு வனங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக இந்த மதிப்பீடுகளில் மேலும் ரூ. 80.36 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க, கூட்டுறவு நூற்பாலைகளில் பங்கு மூலதன மாக முதலீடு செய்யும் பொருட்டு மேற்கொண்டும் ரூ. 153.75 இலட்சம் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கத்தின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் மேற் கொண்டும் ரூ. 100 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

5. கல்வி கற்பதற்கான வாய்ப்புகளையும் கல்வியின் தரத்தை யும் எல்லா நிலைகளிலும் உயர்த்துவதே இவ்வரசின் குறிக் கோளாகும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்துவதற்காக இந்த மதிப்பீடு களில் மேற்கொண்டும் ரூ. 56 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட் டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 22

6. சாலைகள் அமைப்பதில் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதன் பொருட்டு, இந்தத் துணை மதிப்பீடுகளில் மேலும் ரூ. 5.27 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. உலக வங்கி சத்துணவுத் திட்டத்தின் கீழ் துணை நிலையங்களை அமைப்பதற்காக ரூ. 1.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. போக்குவரத்து நிறுவனங்கள் திறமையுடன் செயல்படுவதற்கு உதவி அளிக்கும் பொருட்டு, இந்தத் துணை மதிப்பீட்டில் பல்லவன் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 2.59 கோடியும் தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 1.50 கோடியும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

8. முதியோர் உதவித்தொகை, கைம்பெண்கள், உடல் ஊனமுற்றவர் உதவித்தொகை வழங்கும் தற்போதைய திட்டத்தில் மேற்கொண்டும் 17,934 பேர்களும், வேளாண்மைத் தொழிலாளர்களில் 30,000 பேர்களும் உதவித் தொகை பெறுவர். இக் கூடுதல் செலவிற்கு அனுமதி வழங்குமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

9. 150 காவல் நிலையங்களை ரூ. 3.50 கோடி செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ. 75 இலட்சம் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. அவையில் வைக்கப்பட்டுள்ள 1981–82 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையில் உள்ள சில முக்கியச் செலவினங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகைகளை வழங்கி, திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-20)

(5) அறிவிப்பு.

இறுதித் துணை நிதி அறிக்கை 1981-82 வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவைகளை பேரவையின் 205-வது விதிக்கிணங்க 23—3—1982 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.